★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
# The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No· QB/8945/78

மலர்: 21 பங்குனி 10 ரபி-ஆகி 24 இதழ்: 41
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-3-79

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
PERIODICALS

வடக்கின் நிலைமையால்

## ஜனநாயக விரோதச் சட்டங்களை இயற்றவேண்டி ஏற்படும்

ஜனாதிபதி எச்சரிக்கை

[கொழும்பு]

வட இலங்கையில் இடம் பெற்றுவரும் பாரதூரமான சம்பவங்களிலிருந்து அப்பாவி மக்களைப் பாதுகாக்க ஜனநாயகத்திற்குமாறான கடும் சட்டங்களை இயற்ற வேண்டிய நிலை ஏற்படும் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எச்சரித்துள்ளார்.

இந்த நாட்டில் யாழ்ப்பாணத்தில் என்றாலும்சரி வேறு இடத்தில் என்றாலும்சரி, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது அரசின் தார்மீகக் கடமையாகும். இக் கடமையை நிறைவேற்ற அரசு என்றுமே தவறமாட்டாது என்றும் திரு. ஜெயவர்த்தன கூறினார்.

'புலி இயக்கம்' தொடர்பான விசேட சட்டம் மே மாதத்துடன் காலாவதியாகின்றபோதிலும் இன்றைய நிலையை நோக்குமிடத்து மேலும் கடுமையான சட்டங்களை நிறைவேற்ற வேண்டியது மிக அவசியமாகும் என்றும் கூறிய திரு. ஜெயவர்த்தன, ஜனநாயகம் சிதைக்கப்படுவதை அரசு பார்த்துக்கொண்டிருக்காது என்றும் கூறினார்.

பயங்கரவாதம், அராஜகம், தேசத்துரோகம், பணம் பறிக்கும் செயல் ஆகியவற்றுக்கு எதிராக இலங்கையில் உள்ள சட்டங்கள் மற்றைய நாடுகளைவிட மிக இலகுவாக உள்ளவை சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் அனுமதிப்

[6-ம் பக்கம் பார்க்க]

# மட்டுநகர் எம். பி. இராசதுரை அரசுடன் இணைந்துகொண்டார்

## "நேசக்கரம் நீட்டும் அரசை ஆதரிப்பது தமிழர் கடமை"

### எனப் பாராளுமன்றத்தில் அறிக்கை

(கொழும்பு).

மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. இராசதுரை நேற்றுப் பாராளுமன்றத்தில் அரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டார். தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து அரசாங்கக் கட்சியில் சேர்ந்துகொண்ட இரண்டாவது எம். பி. திரு. செ. இராசதுரையாவார். திரு. இராசதுரை தமது நிலை குறித்துப் பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். திரு. இராசதுரையுடன் அரசாங்கக் கட்சியில் இப்போது 144 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பிக்.களின் தொகை 16 ஆகக் குறைந்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறிய மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செல்லையா இராசதுரை இன்று பாராளுமன்றம் கூடிய சிறிது நேரத்தில் அரசாங்கத் தரப்பு வாயில் பகுதியால் உள்ளே பிரவேசித்து அரசாங்கத்தரப்பின் ஆசன மூலையில் உடுதும்பா எம். பி. திரு. ஆர். பி. அத்தநாயக்காவின் ஆசனத்தில் வந்தமர்ந்தார்.

பாராளுமன்றம் இன்று காலை 10 மணிக்குக் கூடுவதற்கு முன்பாகவே காலை 8-30 மணிக்கே விடுதலைக் கூட்டணியிலிருந்து விலகி அரசாங்கத்தரப்புக்கு இன்று மாறிச் செல்லவிருந்த மட்டுநகர் முதல்வர் திரு. இராசதுரையை வாழ்த்திப் பாராட்டுத் தெரிவிப்பதற்காக மட்டக்களப்பிலிருந்து மூன்று பஸ்களில் சுமார் இருநூறு ஆதரவாளர்கள் வந்திருந்தனர். இவர்களுள் சில பெண்களும் அடங்கியிருந்தனர்.

பாராளுமன்றம் கூடியதும் கேள்வி நேரத்தின்பின் அரசதரப்புக்கு மாறியுள்ள மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி திரு. இராசதுரை சபையில் ஓர் அறிக்கை விடுவார் என்று சபாநாயகர் அறிவித்ததைத் தொடர்ந்து சரியாகப் பத்து மணி இருபது நிமிஷத்துக்கு எழுந்த திரு. இராசதுரை தாம் கூட்டணியிலிருந்து வெளியேறி அரசதரப்புக்கு மாறிய காரணத்தை விளக்கித் தமிழில் தமது அறிக்கையை விடுத்தார் அவர் அரை மணி நேரம் பேசினார்.

#### கணேசலிங்கம் சபையில் இல்லை

திரு. இராசதுரை தமது அறிக்கையை விடுத்தபோது சபையில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திருவாளர்கள் எம் சிவசிதம்பரம், தா சிவசிதம்பரம், வி என் நவரத்தினம், வெ யோகேஸ்வரன் இரா சம்பந்தன், த இராசலிங்கம், கே துரைரத்தினம், வி தர்மலிங்கம், சே. மா. செல்லத்தம்பு ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர். பட்டிருப்பு எம். பி.

[5-ம் பக்கம் பார்க்க]

## வீதியில்சென்ற வாலிபர்மீது திடீர்த் தாக்குதலாம்

[முல்லைத்தீவு]

வீதியால் சென்றுகொண்டிருந்த இரு வாலிபர்கள் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனராம். இவ்வதிர்ச்சிச் சம்பவம் முல்லைத்தீவில் இடம் பெற்றுள்ளது

பொ. புத்திசிகாமணி, ச. தோமஸ் என்ற இரு வாலிபர்களே இவ்வாறு திடீர் தாக்குதலுக்கு இலக்கானவர்களாவர்.

கடந்த 20ந் திகதி செவ்வாய்க்கிழமை இரவு வீதியால் சென்றுகொண்டிருந்த பிரஸ்தாப இரு இளைஞர்களையும் எஸ். ராஜன், ஏ துரைராஜா ஆகிய இருவரும் மற்றும் இருவரும் திடீர் எனத் தாக்கி, துரைராசாவின் வீட்டினுள் இழுத்துச் சென்று படுமோசமாகத் தாக்கியபின் பயமுறுத்தி கடிதம் ஒன்றை எழுதுவித்துப் பெற்றுள்ளதாக புகார்செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இரு வாலிபர்களும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்கள். இச்சம்பவம் பற்றி முல்லைத்தீவுப் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். [ஈ]

## ஜெயப்பிரகாஷ் உரையாடினார்

பம்பாய், மார்ச் 23

இந்திய சர்வோதயத் தலைவர் திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் தமது காரியதரிசியுடனும் டாக்டர்களுடனும் சிறிதுநேரம் உரையாடினார்

யாழ். புகையிரத நிலையக் கொள்ளை | இராச வீதி பஸ் கொள்ளை | சிறுப்பிட்டி கார்க் கொள்ளை

## சந்தேக நபர்களை எவரும் அடையாளம் காட்டவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். புகையிரத நிலையக் கொள்ளை, கோப்பாய்-இராச வீதி பஸ்கொள்ளை, சிறுப்பிட்டி கார் கொள்ளை ஆகிய சம்பவங்கள் தொடர்பாக யாழ் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர் எவருமே அடையாளம் காட்டப்படவில்லை.

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணம் கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள அ. அருங்குணேந்திரன் வ. இராசகுமார், ... தெய்வேந்திரன், க. சின்னத்துரை, க. யோகராஜா, ந சண்முகலிங்கம், வீ நடராஜா ஆகிய ஏழுபேரும் அடையாள அணிவகுப்புக்காக நேற்று நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர்

திரு. சி. அமிர்தலிங்கம் முன்னிலையில் இந்த அணிவகுப்பு இடம்பெற்றது

[6-ம் பக்கம் பார்க்க]

## யாழ். வந்த தென்னிலங்கைப் பத்திரிகையாளர்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்துவந்த பத்திரிகையாளர் குழுவினரை முருகண்டியில், யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ், தர்மபாலன், கலாச்சார உத்தியோகத்தர் திரு. விதானகே ஆகியோர் வரவேற்றார்கள்.

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட இக்குழுவினர் நேற்று பிற்பகல் 4-30 மணிக்கு முருகண்டியை வந்தடைந்தனர்.

நான்கு வெளிநாட்டு பத்திரிகையாளரும், இரு பெண் பத்திரிகையாளரும் உட்பட 30 பத்திரிகையாளர் இக்குழுவிலடங்கியிருந்தனர்.

நேற்றுமாலை 6-30 மணிக்கு இக்குழுவினர் யாழ் அரசாங்க செயலகத்திற்கு வந்தடைந்தனர்

அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்ணாண்டோ இக் குழுவினரை வரவேற்றார்,

அரசாங்கஅதிபர் பத்திரிகையாளர்களுக்கு தமது காரியாலயத்தில்தேநீர்விருந்தளித்தார்.

### பத்திரிகையாளர்விபரம்

#### தகவல் இலாகா

திரு. ஜி. ரி. விக்கிரமசிங்கா (தகவல் அதிகாரி), திரு. ரஞ்சித்சேனரத்ன (பத்திரிகையாளர்)

#### அரச திரைப்படப் பிரிவு

திரு. விமல் பெரேரா (கமராமென்) திரு ஏ. டினதாசா

#### ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திரு. கிங்ஸ்ரன் பெரேரா [நிருபர்], திரு. கிரான்விலை பெரேரா [பதிவு உத்தியோகத்தர்]

#### வெளிநாட்டு நிருபர்கள்

திரு. சந்திரா பெரேரா [என். பி. இ. நியூயோர்க்] திரு. காமினி நவரத்ன [காமினி செய்திச் சேவை] திரு. ஏ சி. எம் சாலி [முஸ்லிம் உலக நிருபர்] செல்வி லூராஹெஸ்கத் [யோநாதன் கேப்பிரசுரிப்பாளர்]

#### உள்ளூர் நிருபர்கள்

திரு பீ ராஜரத்தினம் [தினபதி] திரு சரத்தர்மசேன [தவச] திரு ஜெயந்த சோமசுந்தரம் [லங்காகார்டியன்] திரு என். ஜி தர்மவர்த்தன [தினமின] திரு தர்மசிறி கமகே [ஜவன் ஜனதா] திரு பி பாலசுந்தரம் [தினகரன்] திரு முலின் பெரேரா [ஜனதின] திரு. ஜோ.சேகரா [டெய்லி நியூஸ்] திரு விமல சிறி சுசேஹெவ [லங்காதீப] திரு ஏ பி சி டி சில்வா [தினகரம] திரு ஸ்ரான்லி சமரசிங்கா [அத்த] திரு. வருண கருணாதிலகா- செல்வி அமரசிங்கம் [சி ரியூன்] திரு எம். ஜே எம் சரூ [டெயிலி மிரர்] திரு பீ எஸ் தியாகராசா [வீரகேசரி] திரு எஸ். எஸ் விஜயதுங்க (சன்) திரு. காமினி விஜயதுங்கா தேசாதிப) க சிறிபால திஸ்ஸசேன

[6-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## பயிற்சி

ஆங்கிலம் சிறந்த சுலபமான முறையில் திரு. வ. பொன்னம்பலம் M. A. நடாத்துவார். உடன் தொடர்பு கொள்ளவும், NATIONAL INSTITUTES, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1959

## விற்பனைக்கு

இங்கிலாந்தில் இருந்து தருவிக்கப்பட்ட உதிரிப்பாகங்களைக் கொண்டு தயாரித்த டிரக்டர் பெட்டிகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1960

நல்லநிலையிலுள்ள EY 3000 தொடர்பிலக்கமுடைய சோமசெற் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. 67, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். 1947

இந்தியாவில் பாவிக்கப்பட்ட 'கப்பல் மொடல் 7 ஸ்ரீ ஸ்கூட்டர், மெர்பிஸ்டீரியோ அம்பிலி டியூனர், ஸ்டீரியோ றெக்கோட் பிளேயர், 8 ஸ்பீக்கர்கள் அடங்கிய இரண்டு பெட்டிகள் விற்பனைக்குண்டு. நாதன் மியூசிக்கல் ஸ்டோர்ஸ், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8040. [1982]

## தேவை

கற்பூர உற்பத்தித் தொழிற்சாலைக்கு கைதேர்ந்த ஆண் பெண் தொழிலாளர்கள் தேவை. 25-03-79 ஞாயிற்றுக்கிழமை நேரில் தொடர்பு கொள்ளவும். பரா இன்டஸ்ரீஸ், 'வசந்தம்' இணுவில்வீதி, மானிப்பாய். 1976

யாழ்ப்பாணம் முனிசிப்பல் எல்லைக்குள் அச்சுக்கந்தோருக்கும் புத்தகவியாபாரத்திற்கும் உகந்த இடம் தேவை. யாழ்ப்பாணம் கே. கே. எஸ். றோட், பிரதான வீதி விரும்பத்தக்கது. விபரத்துடன் அறிவிக்கவும். 192, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1975

சிங்கப்பூரில் தையல் வேலை பார்ப்பதற்கு பெண்கள் தேவை. சான்றிதழ்களுடன் ஞாயிறு காலை 9 மணிக்கு நேரில் வரவும் பான் இன்டநஷனல் ட்ரவல்ஸ், 77 அரசடி வீதி, யாழ்ப்பாணம். 1986

## பயிற்சி

விசேட 3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-04-79 ஆரம்பமாகவுள்ளது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11/B மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1978

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. ஈடு / 12046

மேற்படி வழக்கில் வாதி கோண்டாவில் பரநிருபசிங்கம் கைம்பெண் சரஸ்வதிக்கு விற்பனவு திகதிவரை போகவேண்டிய தீர்வைத் தொகை 4256 ரூபா 39 சதமும் வழக்குச் செலவு 475 ரூபா 25 சதமும் பின் ஏற்பட்ட விற்பனவுச் சலார்களும். இத்தொகையை பிரதிவாதி கோண்டாவில் வடக்கு, பரஞ்சோதி வித்தியாசாலையடி நமசிவாயம் மார்க்கண்டுவிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 18-04-1979 புதன்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு பகுதி கோப்பாய் கோவிற்பற்று உரும்பிராயிறை ''கட்டுப்பிலானை'' பர நில. இலா. 20 இணறும் பயிர்களும் இதன் எல்லைக்காரர்கள். கிழக்கு, மாப்பாணர் கந்தருக்கும் பங்காளருக்கும், வடக்குச் சின்னையா பெண் சின்னப்பிள்ளை மேற்கு கந்தர் பெண் தெய்வானை, தெற்கு செல்லையாபெண் பொன்னம்மா. குறித்த கிணற்றில் வடக்கெல்லைக் காணிக்காரருக்குரிய அரைவாசிப்பங்கும் தண்ணீர்ப்பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீக்கலாகவும். வடக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இதடங்கலிக் சொரியலாய் பர நில. இலா. நாலும் அதற்குரியவைகளும். பதிவு. கே, 252/203.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்,
ஏலவிற்பனவாளர்.

'இராசகிரி'
643, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம். 1979

நாடக, அரங்கக் கல்லூரி
ரசிகர் அவைக்காகத்
தயாரித்தளிக்கும்
அம்பலத்தாடிகளின்



"கந்தன் கருணை"
(இசை, ஆட்டம், பாடல் இணைந்த நாடகம்)
நெறியாட்சி - அ. தாசீசியஸ்
25-3-79 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-45 மணிக்கு
வீரசிங்கம் மண்டபத்தில்
நடைபெறும்.
நுழைவுக் கட்டணம்:- ரூபா 5, 3, 2

ரசிகர் அவையில் உறுப்பினராகி
விசேட கட்டணச் சலுகை பெறுங்கள்

1966

## ஏலவிற்பனை

05-04-1979 ந் திகதி மு. ப. 10-00 மணிக்கு கிளிநொச்சிப் புதிய நகரமண்டபத்தில் பழைய தகரம், மலகூடவண்டி, கம்பி, ஆகிய பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும். மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தில் தொடர்புகொள்ளவும்.

எம். சின்னையா,
விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.
விசேட ஆணையாளர்
அலுவலம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி.
1979-03-22. 1983

உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்

## அறிவித்தல்

மேற்படி சங்கத்திற்கு ஒரு கணக்கு இலிகிதர் தரம் II தேவை விண்ணப்பம் அனுப்ப விரும்புவோர் 2-4-79க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

மேலும் விபரம் தேவைப்படின் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்.
22-03-1979 1981

## அறிவித்தல்

வண்ணை ஸ்ரீ வைத்திஸ்வர சுவாமி வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு 23-3-79 முதல் 12-4-79 முடிய கோவில் முகப்பு காங்கேசன்துறை வீதி, முட்டாஸ் கடை சந்திக்கும் சிவன்கோவில் வடக்குவீதி சந்திக்கும் இடையில் தினசரி மாலை 6 மணிமுதல் இரவு 9 மணி வரையும். முட்டாஸ் கடை சந்தியிலிருந்து மானிப்பாய் வீதி, சிவன்கோவில் வடக்கு வீதி இரண்டும் சுவாமி வீதிவலம் வரும்போதும், வாகனப் போக்குவரத்துக்கு மூடப்படும் என்பதை பொது மக்களுக்கு அறியத்தருகிறேன்.

பொலிஸ் அத்தியட்சகர்.
1990 யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் பலாலி வீதி, 37ஐச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர் சோமசுந்தரம் கைம்பெண் மங்கையர்க்கரசி, இல 37, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3432

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979ஆம் ஆண்டு சித்திரை மாதம் 6ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1979ம் ஆண்டு பங்குனி மாதம் 20ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது 1965

## சுலோகம்: நால்வர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அரசியல் பிரமுகர் ஒருவரின் குடும்பம் பற்றி சுலோகங்கள் எழுதியது தொடர்பாக அரசாங்க ஊழியர் ஒருவர் உட்பட முல்லைத்தீவைச் சேர்ந்த நால்வர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவையெல்லாம் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் எதிரொலி என்றே நம்பப்படுகிறது. (அ)

## நாளை கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

"யாழ் மாவட்டத்திலுள்ள தொழிற் சங்கங்களின் பங்கும் பணியும்" என்ற கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு. பொன். குமாரசாமி தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பல்கலைக் கழக விரிவுரையாளர் உட்படப் பல தொழிற்சங்கப் பிரமுகர்கள் பங்குபற்றுவர். கட்சிசாராமல் சகலரும் இதில் பங்கு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [அ]

## விளம்பரம்

பூநகரி ப. நோ. கூ. சங்கத்திற்கு சங்க வாகனங்களுக்கும், பிற வாகனங்களுக்கும் பொருட்கள் ஏற்றவும் இறக்கவும் கூலிக்காரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மீளளிக்கப்படாத ரூ. 2.00 செலுத்தி விபரங்களும், விண்ணப்பப் படிவமும் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுதிகதி 4-4-79.

பொதுமுகாமையாளர்,
பூநகரி. ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி.
1984

## மாணவர் சுற்றுலா

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை சுருவில் றே. க. பாடசாலை மாணவர்கள் வடக்கில் பல இடங்களுக்கு நேற்று முன்தினம் சுற்றுலா மேற்கொண்டனர். பாடசாலை அதிபர் திரு. வி. தியாகராசா தலைமையில் இம்மாணவர் குழு காங்கேசன்துறை, கீரிமலை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களுக்கு சென்று அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிட்டது.

மாணவர்கள், 'ஈழநாடு' காரியாலயத்திற்கும் விஜயம் செய்து பார்வையிட்டனர். (அ)

## அறுபதாவது ஆண்டுப்பூர்த்தி

[தெல்லிப்பழை]

துர்க்காதேவி ஆலய நிர்வாக சபையின் இணைச்செயலாளர் திரு. க. தணிகாசலத்திற்கு இன்று சனிக்கிழமை அறுபதாவது ஆண்டு பூர்த்தியாகிறது. கடந்த பத்து ஆண்டு இவ்வாலயத்தில் நிறைந்தபணியாற்றியவர் இவர். தமது உடல் நலத்தையும் கருதாது ஓயாது ஒழியாது திருப்பணி வேலைகளை நிறைவேறச் செய்தவர் தேர்த் திருப்பணியில் முக்கிய பங்கெடுத்து நிறைவேற்றிய பெருமை இவருக்கு உண்டு. எடுத்த காரியத்தை இனிது நிறைவேற்றும் சிறப்பு இவருடைய தனிச்சிறப்பாகும் அரசாங்க உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிய பின்பு முழு நேரமும் ஆலயப்பணியிலேயே செலவு செய்வது குறிப்பிடத்தக்கது இவருடைய இப்பூர்த்தி விழாவிலே அன்னை துர்க்கையைப் பிரார்த்தித்து மனைவி மக்களுடன் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து நற்பணியாற்ற வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

- அடியார்

## தேவை

வேலை பழகுவதற்கு 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும், குமிழர்களும் உடனடியாகத் தேவை. நேரில் வரவும். வேலை பழகும் பொழுதும் சம்பளம் கொடுக்கப்படும்.

பெனின்சுலா
கண்ணாடித் தொழிற்சாலை,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
1973

## திருமண அழைப்பு

நிகழும் காலயுத்தி வருடம் பங்குனி மாதம் 12-ந் திகதி (26-3-79) திங்கட்கிழமை பகல் 9-25 மணி தொடக்கம் 11-07 மணி வரையுமுள்ள இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரன்
செல்வன்
சாந்திநாதன்
அவர்களுக்கும்
(தொழில் நுட்பவியலாளர்)

சுன்னாகம் இளைப்பாறிய
அதிபர் க நாகலிங்கம்
தம்பதிகளின் புத்திரி
செல்வி
வனிதாமணி
அவர்களுக்கும்

திருமண வைபவம் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவிலில் இனிது நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் சுற்றஞ்சூழ சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்லத்தில் 27-3-79 மாலை 5 மணி முதல் 8 மணி வரை வரவேற்புபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்
சு. நாகமுத்துவும் பாரியாரும்.
மல்லாகம்.
1969

# மக்கள் கருத்து

## திருக்கோணேஸ்வரப் பெருமான் வருடாந்த சுற்றுலா

திருக்கோணேஸ்வரப் பெருமானின் வடாந்த சுற்றுலா அவசியமா? இவ்வைபவம் தொடர்ந்து நடைபெறவேண்டுமா? இச்சுற்றுலா சென்ற 16 வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்றது. இதனால் நகரும் நகர் மக்களும் அடைந்த நலன் என்ன? இச்சுற்றுலா வியாபார நோக்கத்துடன் நடத்தப்படுகின்றதா? இக்கேள்விகளை திருக்கோணமலைவாழ் சைவமக்களின் சிந்தனைக்கும், திருக்கோணேஸ்வர ஆலய நிர்வாகிகளினதும் பரிபாலன சபை அங்கத்தவத்தினதும் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன.

3541 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு 1624-ம் ஆண்டு போத்துக்கேயரால் இடித்து தரைமட்டமாக்கப்பட்ட திருக்கோணேஸ்வர ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் 1952-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1962-ம் ஆண்டு மாசி மாதம் 23-ம் திகதி நடந்தேறிய கும்பாபிஷேக வைபவத்துடன் முடிவடைந்தது அவ்வருடம் ஆரம்பிக்கப்பட்ட இச்சுற்றுலா தொடர்ந்து சென்ற 16 வருடங்களாக தவறாது நடந்து வருகின்றது.

இச்சுற்றுலா வருடா வருடம் கடவுளின் பெயரால் ஒரு களியாட்டு விழாவாக மாறிக்கொண்டே வந்துள்ளது. தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் கள்ள சந்தைக்காரருக்கும் தமது ஓய்வு நேரத்தை எவ்விதம் கழிப்பது என்று தெரியாது சந்திக்குச் சந்தி குழுமி நின்று காலத்தைப் போக்கும் கூட்டங்களுக்கும் தமது வீடுகளில் அடைந்திருக்கும் யுவதிகளுக்கு சமயக் கோட்பாடுகளை நையாண்டி பண்ணித்திரியும் கோஷ்டிகளுக்கும் இச்சுற்றுலா ஓர் அரிய சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுக்கின்றதே அல்லாது வேறு எவ்வித நன்மையும் இச்சுற்றுலாவால் இந்நகருக்கோ நகர மக்களுக்கோ விளையவில்லை என்பதை உலகம் அறிந்த மெய்ஞானம் படைத்த எவருமே ஏற்றுக் கொள்வார்கள் கோணேசப் பெருமான் பார்வதி அம்மன் சகிதம் திருக்கோணமலைக்கு அருள் பாலிக்க வருடா வருடம் இச்சுற்றுலாவை நிர்வாகிகள் ஏற்படுத்தியுள்ளார்கள் என்று கூறின் அவ்விதம் கூறுவது கோணேசப் பெருமானின் கைங்கரியத்திற்கே இழுக்கு என்று தான் நான் கருதுகின்றேன்.

இலங்கையில் பாடல்பெற்ற ஸ்தலங்கள் இரண்டுள-திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் இவ்விரண்டு ஸ்தலங்களிலும் திருக்கோணேஸ்வர ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கான வேலைகளிலும் பார்க்க பல வருடங்களுக்கு முன்பதாக ஆரம்பிக்கப்பட்டு முடிவுற்றன இருந்தும் திருக்கேதீஸ்வரத்தின் கும்பாபிஷேகம் சென்ற ஆண்டுதான் நடந்தேறியது. இலங்கையின் பல பாகங்களிலும் வாழும் சைவ அன்பர்கள் மத்தியில் திருக்கேதீஸ்வரத்திற்கு செல்வதற்கு உள்ள ஆர்வமும் ஊக்கமும் திருக்கோணேஸ்வரத்திற்கு வருவதற்கு இல்லாது போனதற்கு காரணம் என்ன? உற்சவகாலங்களில் இந்நிலையை நலன் உணரக்கூடியதாக இருக்கின்றது. சிவன்ராத்திரி உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக சைவ அன்பர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து விசேட புகையிரதம், பஸ்வண்டி மூலம் பல கஷ்டங்களுக்கு மத்தியில் ஆயிரக்கணக்காக திருக்கேதீஸ்வரத்திற்கு யாத்திரை மேற்கொள்கிறார்கள். கொழும்பு, யாழ் நகர் போன்ற இடங்களிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட விசேட புகையிரதங்களைச் சேவையில் ஈடுபடுத்தி திருக்கேதீஸ்வரத்திற்கும் பக்தர்களை ஏற்றிச் செல்ல அரசாங்கம் ஒழுங்கு செய்துள்ளது.

இதற்குப் பதிலாக திருக்கோணேஸ்வரத்திற்கு: திருக்கோணமலை வாழ் சைவ அன்பர்கள் கூட இவ்வித வைபவங்களுக்காகுதல் திரண்டு செல்வதே அரிது அதனால் திருக்கோணேஸ்வரம் என்ற ஓர் ஆலயம் இருந்ததா என்று கேள்வி மாற்றுர். மத்தியில் தலை தூக்கியிருக்கும் இவ்வேளையில் சுற்றுலா போன்ற தமாஷாக்களைக் கைவிட்டு திருக்கோணேஸ்வர ஆலயத்தையும் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆகியவை செய்யும் பணியில் ஆலய நிர்வாகசபை தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும். இதற்கு ஒருவழி பல பாகங்களில் வசிக்கும் சைவ அன்பர்கள் திருக்கோணேஸ்வரத்திற்கும் யாத்திரை மேற்கொண்டு வருகைதந்து சைவ அனுட்டானங்களில் பங்குபற்றச்செய்து இவ்வாலயத்தின் மகத்துவத்தையும் முக்கியத்துவத்தையும் நிலைநாட்டி அரசாங்கத்தினதும் மாற்றுர் மத்தியிலுள்ள தம்பபிப்பிராயத்தையும் ஆலயத்தை கைப்பற்றும் நோக்கத்தையும் அகற்றுவதில் பரிபாலன சபை ஈடுபடவேண்டும்.

ஆலய பரிபாலன சபையும் திருக்கோணமலை வாழ் சைவப் பெருமக்களும், முக்கியமாக இளைஞர் சமுதாயமும் சிந்தித்து செயல்படவேண்டிய கட்டமிது.

பா.விஜயநாதன்
திருக்கோணமலை.

# உள்ளூராட்சி மன்றதேர்தல்: கட்சிகள் தயாராகின்றன!

(வெள்ளவத்தை)

புதிய அரசியலமைப்புத் திட்டத்தின்படி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மே மாதம் 31ம் திகதிக்கு முன்னர் நடைபெறுகின்றன.

புதிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் நடைபெறப்போகும் முதல் தேர்தலாக இவ்வருட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் அமையும்.

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியனவும் தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மக்கள் விடுதலை முன்னணி ஆகியனவும் போட்டியிட உள்ளன.

ஒன்பது மாநகரசபைகளுக்கும் 34 நகரசபைக்களுக்குமான இந்தத் தேர்தலை ஒரே நாளில் நடத்த தேர்தல் திணைக்களம் திட்டமிட்டுள்ளது இத்தேர்தல்கள் ஆறு வருடங்களுக்குப் பின்னர் நடக்கின்றன.

கொழும்பு மாநாகரசபைக்காகப் போட்டியிடுவதற்காக கட்சிகள் தங்கள் பெயர்ப் பட்டியலைத் தயாரிக்க முனைந்துள்ளன. முதன் முறையாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மக்கள் விடுதலை முன்னணி(ஜே. வி. பி) தேர்தலில் போட்டியிடவிருக்கின்றன.

ஐக்கிய தேசியக்கட்சியின் பெயர்ப்பட்டியலில் முதல் பெயராக ஜனாப் நஸீரின் பெயரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெயர்ப்பட்டியலில் ஜனாப் ஹலீம் இஷாக்கின் பெயரும், இடதுசாரி ஐக்கிய முன்னணியின் பெயர்ப்பட்டியலில் லங்கா சமசமாஜக்கட்சி பொதுச்செயலாளர் திரு பெர்னட் சொய்சாவின் பெயரும் இ.தொ.கா பெயர்ப்பட்டியலில் திரு. எம். எஸ். செல்லச்சாமியின் பெயரும், மக்கள் விடுதலை முன்னணிப் பெயர் பட்டியலில் திரு. உபதிஸ்ஸ சுமநாயக்காவின் பெயரும் இடம்பெற்றுள்ளதாக அறியப்படுகிறது

## 'இன்றைய உலகின் மிகப் பெரிய கூட்டுறவு இயக்கம்'

[பண்டத்தரிப்பு]

''ஒரு காலத்தில் பிரித்தானிய முடியின் கீழ் இயங்கிவந்த சாம்ராச்சிய நாடுகள் இன்று சுதந்திரமும், தன்னுதிக்கமும் பெற்ற நாடுகளாக விளங்கிய போதிலும் பொதுநல அமைப்பு என்ற கூட்டுறவின் கீழ் ஒன்றாக இயங்கி வருகின்றன. இன்றைய உலகில் மிகப் பெரிய கூட்டுறவு இயக்கமாக விளங்குவது பிரித்தானிய பொதுநல அமைப்பேயாகும்'' என்று பண்டத்தரிப்பு ஜசிந்தா பாடசாலையில் நடைபெற்ற பொதுநல அமைப்பு நாடுகள் தினவிழாவில் உரையாற்றுகையில் ஆசிரியர் திரு சாமுவேல் பெனடிக்ற் குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் அருட்செல்வி மேரி கதரின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பொது நல அமைப்புநாடுகள் பற்றிய கண்காட்சியைப் பாடசாலை அதிபர் திறந்துவைத்தார். இக்கண்காட்சியில் பொதுநல நாடுகளின் தூதராலயங்கள் வழங்கிய சுவரொட்டிகள், பிரசுரங்கள், நிழற்படங்கள் ஆகியன இடம்பெற்றிருந்தன. [அ]

ஏப்ரல் 15-ந் திகதி

# நஸீர் மீண்டும்

## உலக சாதனைக்காக ஆடுவார்

[யாழ்ப்பாணம்]

'டுவிஸ்ட்' நடனத்தில் புதிய உலக சாதனையை நிலைநாட்டு மீண்டும் யாழ். மூளிலம் பகுதியைச் சேர்ந்த ஜனாப் பரித் நஸீர் முயற்சிக்கவிருக்கிருர்.

யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் ஏப்ரல் மாதம் 15ம் தேதி மாலை 5 மணிக்கு இவர் 'டுவிஸ்ட்' நடனத்தை ஆரம்பிக்கவிருக்கிருர்.

கடந்தமுறை இவர் 115மணித்தியாலங்கள் தொடர்ந்து ஆடியபின் உடல்நிலை சரியில்லாததினுல், மயக்கமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்.

தற்பொழுது பூரண ஓய்வு எடுத்துவரும் ஜனாப் பரித் நஸீர் உலக சாதனையை நிலைநாட்டுவேன் என்று நம்பிக்கை தெரிவித்தார். (க)

## குடிநீர் மின்சாரம் இல்லை

[உடுப்பிட்டி]

அல்வாய் மேற்கு திக்கம் கிராமத்தில் கடந்த பல வருடகாலமாகக் குடிநீர் மின்சார வசதிகள் இன்றிப்பொது மக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர் ஒருமைல் தூரத்திலுள்ள நல்ல நீரைக்கொண்ட கிணறென்றை இக்கிராம மக்கள் நம்பியிருக்கவேண்டியுள்ளது.

இக்கிராமத்தின் அயல் கிராமங்கள் யாவும் மின்சார விநியோகத்தைப் பெற்றுள்ள இக்கிராமம் இன்னும் மின்சார இணைப்பு இன்றி இருந்து வருவது குறிப்பிடத்தக்கது

அல்வாய் மேற்குக்குழாய் நீர்த்திட்டத்தையும் மின்சார விநியோகத்தையும் வழங்குமாறு டருத்தித்துறை எம் பி திரு கே. துரைரத்தினத்திடம் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. [கு]

## சிவானந்த குருகுலத்தின் சமயக் கருத்தரங்கு

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் சிவானந்தகுருகுல பரிபாலனசபை, எமது சமயத்திற்குரிய சிவாசாரியர்களை முறையாகப் பயிற்றுவிக்கும் பொருட்டு குருகுல அடிப்படையில் பாடசாலை ஒன்றை நடத்திவருவது யாவரும் அறிந்ததே.

குருகுல பரிபாலன சபையினர் ஏனைய குருமாரின் நன்மை கருதியும் மற்றும் சைவமக்களின் நன்மையின் பொருட்டும் பல்வேறு விஷயங்களை உள்ளடக்கிய கருத்தரங்குத் தொடரினை ஏற்படுத்தி, முறையாக நடத்தத்திட்டமிட்டுள்ளனர். இத்தகைய கருத்தரங்குத் தொடரில் சமயக்கிரியை முறைகளின் நுணுக்கங்களை அறிந்த அனுபவம் மிக்க சிவாசாரியர்கள் உரையாற்றவிருப்பது குறிப்பிடத்தக்கதொன்ருகும். அத்துடன் சைவசமயக்கிரியைகள் பற்றியும் சமயத்தோடு தொடர்பானமற்றும்பல்வேறு அம்சங்களைப்பற்றியும்ஆராய்ந்தறிந்த அறிஞர்களும் இக்கருத்தரங்குகளில் கலந்துவிளக்கமளிக்கவிருக்கின்றனர்.

இத்தகைய முயற்சி எமது சமய குருமாருக்கும் மக்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது. குருமார்கள் தமது அனுபவத்தை வளர்த்துக் கொள்ளவும் ஏனையோர் சமயத்தின் நுணுக்கமான அம்சங்களைத் தெரிந்துகொள்ளவும் இக்கருத்தரங்குத் தொடர் உதவுமாகையால், இச்சந்தர்ப்பத்தை யாவரும் பயன்படுத்தவேண்டுமென சிவானந்த குருகுல பரிபாலன சபை எதிர்பார்க்கிறது

இக்கருத்தரங்குத் தொடரில் முதலாவது கருத்தரங்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தான ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்களின் ஆதரவில் மாவை கந்தசுவாமி கோவிலின் தெற்கு வீதியில் அமைந்துள்ள சுவடிச் சாலையில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை இடம் பெறுகிறது: பேராசிரியர் கா கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் 'சைவ சமயக்கிரியைகள்' என்ற தலைப்பில் சிவாசாரியர்களும் அறிஞர்களும் கருத்துரை வழங்குவர்

இதுபோன்ற கருத்தரங்குகள் யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களிலும் அவ்வப் பிரதேச சைவ மக்களினதும் குருமார்களினதும் நன்மை கருதி நடாத்தப்படவிருக்கின்றன

ப. கோபாலகிருஷ்ணன்

## சாரணருக்கு பயிற்சி

[சாவகச்சேரி]

சாரண ஆசிரியர் குருளைச் சாரணர் ஆதாரபயிற்சி நெறியும் சாரணர் தலைவர்களுக்கான ஆதார நெறிப்பயிற்சியும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நல்லூர் யாழ்ப்பாணம் ஆகிய தொகுதிகளிலிருந்து கூடுதலான பயிற்சிநெறியாளர்கள் இவ்வகுப்பில் கலந்து கொண்டார்கள். (கு)

## வர்த்தகத்தொழில் புனிதமானது

[புலோலி]

வர்த்தகர்கள் நுகர்வோரின் இரட்சகர்களாக விளங்குகின்றனர் ஆதலால் இலாப நோக்கை மனதிற்கொள்ளாது பாவனையாளர்களின் நலன் கருதி சேவைமனப்பான்மையுடன் இயங்கவேண்டும் வர்த்தகம் புனிதமான ஒரு தொழில்

இவ்வாறு யாழ் விலைக்கட்டுப்பாட்டு உதவி ஆணையாளர் திரு கே. எஸ். வேல்முருகு பருத்தித்துறைப்பகுதி வர்த்தகர்களைக் கொண்ட கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கேட்டுக் கொண்டார் இக்கருத்தரங்கை வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு வைவேலுப்பிள்ளையும் ஒழுங்கு செய்திருந்தார்

யாழ் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகளும் புலோலி பருத்தித்துறைப் ப. நோ. கூ. சங்கப்பொது முகாமையாளர்களும் சமூகமளித்திருந்தனர். [அ]

## தவக்கால நற்சிந்தனை

"வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன்.''

(மத்தேயு 11 : 28)

இதோ கிறிஸ்துதேவன் நம்மை அழைக்கிருர்.

மனிதன் பிறந்தது முதல் இறக்கும்வரை தான் செய்த புண்ணியம் பாவங்களின் பயனாக நன்மை தீமைகளில் உழன்று வருகிருன் எனினும் அவனது செயல்கள், நடக்கைகள் ஆகியஎல்லாவற்றிலும் பாவமே தலைதூக்கி நிற்கிறது. நம்முடைய எண்ணங்கள், எழுச்சிகள் அனைத்தும் நம்மை உலகுக்குப் பாவி என்றே பறைசாற்றிக்கொண்டுவருகின்றன.

கிறிஸ்தவின் மகனே! உன்னை அன்புக்கரம் நீட்டி அழைக்கும் கிறிஸ்து பெருமானின் அழைப்பை ஏற்க எண்ணங்கொண்டாயா?

—ஞானஒளி

தொகுப்பு: வில்பிறெட்

### பூட்டோவின் மரணதண்டனை மேன்முறையீட்டை

# பாக். உயர்நீதிமன்றம் நிராகரிக்குமா?

## தீர்ப்பு இன்று வழங்கப்படும்

இஸ்லாமாபாத், மார்ச் 22

**பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனாப் சூல்பிகார் அலி பூட்டோவின் மேன்முறையீடு குறித்து பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் நாளை சனிக்கிழமை தீர்ப்பு வழங்கும்.**

ஜனாப் பூட்டோ, தமக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனைத் தீர்ப்பை எதிர்த்து, உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் [மேன்முறையீடு] செய்திருந்தார் இது சம்பந்தமாக நடைபெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்குவது நாளை சனிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாப் பூட்டோவின் அப்பீலை, உயர்நீதிமன்றம் நிராகரிக்கும் பட்சத்தில், மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கான நாள் உடனடியாக அறிவிக்கப்படும் என்றும் ஆனாலும் மன்னிப்பு வழங்குவது சம்பந்தமாக ஒரு வாரகால அவகாசம் வழங்கப்படலாம் என்றும் தெரியவருகிறது.

### மன்னிப்பு கிடைக்குமா?

ராஜதந்திர வட்டாரங்களை ஆதாரமாகக்கொண்டு சவூதி அரேபிய பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் ஜனாப் பூட்டோ அரசியல் துறவறம் கொள்ளும் பட்சத்தில் பாகிஸ்தான் இராணுவ நிர்வாகி ஜெனரல் ஸியாவுல் ஹக் மன்னிப்பு வழங்கலாமென்று தெரிவித்துள்ளது

ஆனாலும் இந்த நிபந்தனையுடன் கூடிய மன்னிப்பு ஆயுள்தண்டனையாக இருக்குமா அல்லது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இருக்குமா என்பது பற்றி சவூதி பத்திரிகை செய்தி எதுவும் வெளியிடவில்லை.

பூட்டோவின் மரணதண்டனை அப்பீலை, உயர்நீதிமன்றம் நிராகரிக்கும் என்று ஏஜென்ஸி செய்திகள் ஹேஸ்யம் கூறுகின்றன.

## பர்மிய - சீன எல்லையில் கலகக்காரர் அட்டகாசம்

### ஒரு கிராமமே தீக்கிரையானது

ரங்கூன், மார்ச் 23

பர்மிய-சீன எல்லையில் சீன ஆதரவு கலகக் கோஷ்டிகள் மேற்கொண்டுவரும் அரசு விரோத நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக இங்கு நடைபெற்ற ஊர்வலங்களில் 25,000க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

மொய்ஷீ மாவட்டத்திலுள்ள மலைக் கிராமமான மீகோங்கில் சீன ஆதரவுக் கலகக் கோஷ்டிகள் தொடர்ச்சியாக நடத்தி வரும் தாக்குதல்களினால் பர்மிய மக்கள் பெரும் அச்சம் கொண்டுள்ளனர்

கலகக் கோஷ்டிகளுக்கு உணவு வழங்க கிராமத் தலைவர்கள் மறுத்த காரணத்தினால் ஒரு கிராமமொன்று தீக்கிரையாக்கப்பட்டது.

"நிபந்தனையின்றி

## சீனத் துருப்புகள் வெளியேற வேண்டும்!"

### வியட்னாம் கோருகிறது

ஹனோய், மார்ச் 23

வியட்னாமிலிருந்து சீனா தனது துருப்புகளை நிபந்தனையின்றி வாபஸ்பெறவேண்டும் என்று வியட்னாம் அறிவித்துள்ளது.

"வியட்னாமின் வடக்குஎல்லையில், பதினெட்டுப் பகுதிகளில் சீனா தனது துருப்புகளை நிலை

[5ம் பக்கம் பார்க்க]

# ஆப்கானுக்கு எதிரான சதி நடவடிக்கைகள்

### பாக். ஒரு தளமாகப் பயன்படுத்தப்படுகின்றதா?

லண்டன், மார்ச், 22

"ஆப்கானிஸ்தானில் வெளியார் தலையீடு அதிகரித்துள்ளது. ஆப்கான் அரசை விழ்க்க இப்பொழுது சதி நடக்கிறது. இதற்கு பாகிஸ்தான் ஒரு தளமாகப் பாவிக்கப்படுகிறது" என்று 'பிராவ்தா' குற்றஞ்சாட்டியுள்ளது.

"ஆப்கானிஸ்தானில் நூர் முகம்மது தராக்கியின் ஆட்சியை கவிழ்க்க நடத்தப்பட்டு வரும் சதிக்கு உள்நாட்டு சக்திகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பொருதாரம் பின்தங்குதலை நீக்கி, சமூக மாற்றங்களை அமுலாக்க ஆப்கான் அரசு முயன்று வருகிறது. உழைக்கும் மக்களின் நலன் களையிட்டு, நில மற்றும் சீர் திருத்தங்கள் புகுத்தப்பட்டன. இஸ்லாத்துக்கு விசுவாசத்தை அரசு பிரகடனம் செய்தது. அயல்நாட்டுக் கொள்கையில் அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இவற்றை விரும்பாத மேற்கு வட்டாரங்கள் தங்கள் உதவியுடன் உள்ளூர் கலகக் காரர்களுக்கு ஊக்கமளித்து வருகின்றன. அரசுக்கு எதிராகப் புரட்சி நடத்தும்படி தூண்டப்படுகின்றனர். இதற்காகப் பாகிஸ்தான் ஒரு தளமாகப் பயன்படுத்தப்படுகிறது. பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தானுக்கு விரோதமான பிரச்சாரம் நடத்தும் வானொலிநிலையம் இயங்குகிறது. பாகிஸ்தானிலிருந்து தான் ஆப்கான் எதிர்ப்பு துண்டுப்பிரசுரங்கள் அனுப்பப்படுகின்றன. பாகிஸ்தானில் கடமையாற்றும் எகிப்திய ராஜதந்திரிகள், "மூஸ்லிம் சகோதரர்கள்" ஸ்தாபனத்துக்கு நிதிஉதவி வழங்கி வருகின்றனர். ஆப்கான் அரசுக்கு எதிராக திட்டங்கள் அமுலாக்கப்படுவதற்கு இவர்கள் உதவி வருகின்றனர்" என்று 'பிராவ்தா' எழுதியுளது.

## அரபுலீக் செயலாளர் ராஜினமா!

கெய்ரோ, மார்ச் 22

அரபுலீக்கின் செயலாளர் நாயகம் திரு. ரியாட் தமது பதவியை ராஜினமா செய்துளார்.

இப் பதவிகளில் ஏழுஆண்டுகளாகக் கடமையாற்றிய இவர், அரபு உலகில் நிகழும் கருத்துவேறுபாடுகள் காரணமாகவே ராஜினமா செய்துள்ளார். இவர் ஐக்கிய அரபு குடியரசை சேர்ந்தவர்.


# உங்கள் தாயார் தினமும் உங்களுக்கு புரோற்றினெக்ஸ்® தருவது ஏனென்று தெரியுமா?

**ஆம் அது சொக்லேட் சுவைகொண்டதாம்**

ம...., ம .... அதுவும் சரிதான், ஆனல், புரோற்றினெக்ஸ் 56% புரதச் சத்து கொண்ட ஆரோக்கியமான பானம் என்பதாற்தான் தாயார் அதனை வாங்குகிறுர் என்பது எனது எண்ணம்.

**புரதச்சத்து? அதுஎன்ன செய்கிறது?**

உங்களது போன்ற இளம் உடம்புகளுக்கு, தசை நார், எலும்பு, மூளை விருத்திக்கு புரதச்சத்து தேவை புரோற்றினெக்ஸிலுள்ள புரதம் புத்தி கூர்மையை உண்டாக்கிறது. நோய்கள் வராமல் பாதுகாக்கிறது.

**என்ன? புரோற்றினெக்ஸ் இத்தனையும் செய்கிறதா?**

உண்மையாகவேதான்.

அதுமட்டுமல்ல, புரோற்றினெக்ஸ் மற்றெந்தத்தையும் விட எடைக்கு எடை மிக உயர்ந்த புரதச் செறிவுள்ளது. அத்துடன் விற்றமின்களும் கனிப் பொருட்களும் நிறைந்தது.




புரோற்றினெக்ஸ் தெரிந்தெடுக்க அம்மா உண்மையாகவே கெட்டிக்காரிதான்

அப்படியே மீண்டும் மீண்டும் கூறிக்கொள்ளலாம்.

கைக்கடக்கமான 50 கிறும் பக்கெற்றுகளிலும் மலிவான 125 கிறும் பக்கெற்றுகளிலும்



# புரோற்றினெக்ஸ் சாதாரண மோல்ற் பானத்திலும் உன்னதமானது

Grant K & E 924

RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
ANIMAL
(Full length Comedy)
Family Entertainment

வெஸ்லி
(காண்டிபாம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-பத்மபிரியா
உறவு சொல்ல
ஒருவன்

ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-30&9-45
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
பாக்தாத் பேரழகி
(கலர்) (புதிய பிரதி)

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சாவித்திரி
ஹலோ மிஸ்டர் ஜெமின்தார்
(புதிய பிரதி)

சாந்தி போன்: 7642
யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
விநோத் கன்னா... கபீர் பெடாய்...
"குச்சே டாஹ்" —ஹிந்தி
KUCHCHE DAAGE—HINDI
IN EASTMAN COLQR
ROBBERY, SUSPENSE, THRILL AND
—FULL OF ACTION PACKED FILM—
Music: LAXMIKHANT - PYARALAL
இந்தியாவில் சாம்பல் பள்ளத்தாக்கில் நடந்த
பயங்கரக் கொள்ளைக் கோஷ்டியின் கதை.
24-3-79 — 10-30 மட்டும் நிதியுதவிக்காட்சி!
"குலமகள் ராதை"

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி; 2-30, 6-30&9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30
6-30 & 9-45
ஜெமினி — சாவித்திரி
கடன்வாங்கிக் கல்யாணம்
(புதிய பிரதி)

லிடோ போன்: 7638 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமாரி - ஸ்ரீவித்யா - தங்கவேலு
(யாழ்.நகர்) ஆசை அறுபதுநாள்

REGAL
(Jaffna)
3rd CROWDED WEEK
Daily 4 Shows
2-00, 4-30,
7-00 & 9-30 p.m. only
JEAN PAUL - BELMONDO in
THE HUNTER (color)
(Spy film)
த ஹன்ரர்

ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி
டி. ஆர். மகாலிங்கம்
ஸ்ரீ வள்ளி
(புதிய பிரதி—கலர்)

13-வது வாரம்
வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
நடித்த
எதிரொலி
(புதிய பிரதி)


# இன்றைய பலன்

பங்குனிமாதம் 10-ம் திகதி

(24-3-1979)
சனிக்கிழமை

**மேடம்:** வாழ்க்கை செளகரியமாக இருக்கும், அறிவுத்தாகம் மேலிடும, நீண்டநாள் பிரச்னைக்கும் இன்று முடிவு காணப்படும்.

**இடபம்:** செய்தொழிலால் சிறப்புண்டு, புதிய பாதையில் நடைபோடுவீர்கள், முதியவர் ஒருவர் உங்களுக்கு வழிகாட்டுவார், புத்திர சுகமும் உண்டு.

**மிதுனம்:** வெளியிடத்துப் பயணம் வேதனை தரும், ஆயுதபயத்திற்கும், அரச கவலைக்கிடமுண்டு, எதிரிகள் விடயத்தில் விழிப்புடன் இருக்கவும்.

**கடகம்:** வாழ்க்கை கரும்பு போல் இனிக்கும், நாடகக் கலைஞர்களுக்கு சிறப்பான தினம், குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும்.

**சிங்கம்:** நண்பர்களின் நச்சரிப்பு மனக்குமச்சலை ஏற்படுத்தும், கடமையாற்றுமிடத்தில் கழுகுப்பார்வை வட்டமிடும். நிதானபுத்தி விரும்பத்தக்கது.

**கன்னி:** பொதுத்துறையில் நாட்டம் பிறக்கும், பிதாவழி மூலம் ஆதரவு கிடைக்கும், கொள்கைவழி வாழ்க்கையை அமைப்பதில் மகிழ்ச்சியடைவீர்கள்.

**துலாம்:** எதிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவீர்கள், வியாபாரிகள் ஆதாயம் பெறுவர், அரசினர் விருந்துக்கும் இடமுண்டு.

**விருச்சிகம்:** பூமியால் முன்னேற்றம் உண்டு, புத்திரவழிப் பெருமையும் உண்டு. பெரியோர் ஆதரவுக்கும் இடமேற்படலாம்.

**தனுசு:** சிந்தனையில் தடுமாற்றம் தென்படும், தொழில் துறையில் மறைமுக எதிர்ப்புக்களுக்கு இடமுண்டு, முன்யோசனையுடன் இருக்கவும்.

**மகரம்:** வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும், குடும்பத்தில் அமைதி குன்றும், நன்கு ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும்.

**கும்பம்:** விவசாயிகள் வாழ்க்கையில் மகிழ்ச்சிக்கிடமுண்டு, கண்ணியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலாம், உற்சாகமான தினம்.

**மீனம்:** செய்தொழிலில் பதட்டநிலை தென்படும், பல வழிகளிலும் பணம் செலவாகும், சகோதரவழிக் கவலைக்கும் இடமுண்டு, பொறுமை விரும்பத்தக்கது.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## நிபந்தனை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளை செய்திருக்கிறது. 10,000 சீனத் துருப்புகள் வியட்னாமுக்குள் இன்னும் இருக்கின்றனர். இத்துருப்புகளை உடனடியாகத் திருப்பி அழைத்தால் மட்டுமே பேச்சு வார்த்தைக்கு இடமுண்டு" என்று வியட்னாம் வெளியிட்டுள்ள குறிப்பொன்றில் தெரிவித்துள்ளது.


நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர். - ராதா
சலுஜா
இதயக்கனி


# மட்டுநகர் எம். பி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பூ. கணேசலிங்கம் சபையிலிருக்கவில்லை.

## எந்த வித குறுக்கீடும் இல்லை

திரு. இராசதுரை தமது அறிக்கையைப் பாராளுமன்றத்தில் விடுத்தபோது எந்த வித குறுக்கீடுகளும் இருக்கவில்லை.

## சிறு சலசலப்பு

ஆனால் இடையே திரு. வி. என். நவரத்தினமும், திரு. கே. துரைரத்தினமும் எழுந்து சென்றபோது அரசாங்க தரப்பு எம் பிக்கள் சிலர் "என்ன ஒவ்வொருவராக எழுந்து நழுவப்பார்க்கிறீர்களோ?" என்று குறுக்கிட்டுச் சொன்னபோதுமட்டும் சிறு சலசலப்பு ஏற்பட்டது.

## மாலை சூட்டி ஆரத்தழுவி

## பச்சை மாலை சூட்டினர்

சரியாகப் பத்து மணி ஐம்பது நிமிஷத்துக்குத் தனது அறிக்கையை முடித்துக் கொண்டு திரு. இராசதுரை பாராளுமன்றத்தின் பிரதான வாசல்படிக்கட்டுகளால் வெளியே வந்தபோது அவரை எதிர்பார்த்து மட்டக்களப்பிலிருந்து வந்து காத்திருந்த ஆதரவாளர்கள் அவருக்கு மாலைகள் சூட்டி ஆரத்தழுவி முத்தமிட்டு வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்தனர். திரு. இராசதுரைக்குப் பச்சை நிறமாலைகள் இலவும் அணிவிக்கப்பட்டன.

## அரசாங்க எம். பிக்கள் மாலை சூட்டினர்

அரசாங்க எம். பிக்கள் சிலரும்கூட திரு. இராசதுரைக்கு மாலைகள் அணிவித்தனர். திரு. இராசதுரைக்கு மாலை சூட்டிய எட்டியாந்தோட்டை எம். பி., திரு. இராசதுரை வாழ்க என்று தமிழில் கூறியதுடன் நாமனைவரும் ஒருதாய் மக்கள்போல் வாழவேண்டுமென்றும் கூறினார். இதைத் தொடர்ந்து இரத்தினபுரி எம். பி.யும் திரு. இராசதுரைக்கு மாலை சூட்டினார். சில அமைச்சர்களும் திரு. இராசதுரைக்கு கைலாகு கொடுத்துப் பாராட்டுத் தெரிவித்தனர்.

## செல்வாவின் அஞ்சலியுடன்....

திரு. இராசதுரை தமது அறிக்கையை வெளியிடும்போது முதலில் அமரர் தந்தை செல்வநாயகத்திற்கு அஞ்சலி செலுத்தி ஆரம்பித்தார்.

தீர்க்கமான முடிவோடு தான் நான் பேசத்தொடங்குகிறேன் என்று ஆரம்பித்த திரு. இராசதுரை "எனது அரசியல் குருவும் வழிகாட்டியும் ஒப்புயர்வற்ற இந்த நாட்டின் கண்ணியம்மிக்க நேர்மைநிறைந்த எம் தலைவன் இன்று உயிரோடு இருந்திருந்தால் அவரின் ஆசியும் அன்பும் எனக்கு என்றும் இருக்கும்" என்று கூறினார்.

## 30 ஆண்டுப் போராட்டங்கள் ஹர்த்தால்கள்

முப்பது ஆண்டுகளுக்கு மேலிட்ட போராட்டங்களும் கறுப்புக்கொடிகளும் ஹர்த்தால்களும் அடுத்த பொதுத் தேர்தலில் மீண்டும் வெற்றியீட்டி பாராளுமன்றப் படிகளில் ஏறத்தான் வழிவகுக்குமே தவிர அழிவுற்ற என் தாய்த் திருநாட்டைப் புனரமைக்கவோ வாழ்விழந்து நிற்கும் எனது மட்டுநகர் மக்களுக்குப் புதுவாழ்வு அளிக்கவோ முடியாது.

அரசின் உதவியும் ஒத்தாசையும் நல்லெண்ணமும் என்ற பெருநிதியம் இருந்தால் தான் பொலிவிழந்துள்ளமட்டுநகர் மீண்டும் பதினைந்து ஆண்டுகளுக்குள்ளாவது பொலிவுற்ற பொன்னகர்ப் பிரதேசமாக முடியும்.

இந்தவகையில் திரு. கே. டபிள்யு. தேவநாயகமும், திரு. தொண்டமானும் பணியாற்றுகின்றனர்.

தார்மீக ஆட்சியை நிலைநாட்ட முன்வந்துள்ள ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேசக்கரம் நீட்டியுள்ளார். அந்த நேசக்கரத்தை உறுதியோடும் நம்பிக்கையோடும். நேசத்தோடும், நேர்மையோடும். ஆர்வத்தோடும் அன்போடும் ஏற்று இந்நாட்டில் வெறுப்பும் விரோதமும் கசப்பும் கரிப்புமின்றி ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது நமது கடமை.

அப்படியான சந்தர்ப்பமும் நாட்டமும் பயனற்றுப்போகுமானால் நாம் விட்ட இடத்திலிருந்து வேறு திசையைநோக்கிப் பயணத்தைத் தொடருவோம்.

எல்லாம்வல்லஇறைவன் நமக்கு நல்வழியே காட்டுவான் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

## துரோகமும் குழிபறிப்பும்

தனிப்பட்ட முறையில் எனக்குத் துரோகமும் குழிபறிப்புக்களும் இம்சைகளும் ஏற்படுத்தப்பட்டபோதும் எனது அருமைத் தலைவர் தந்தை செல்வாவுக்காக இதுவரை பொறுத்திருந்தேன். இன்னமும் பொறுத்திருப்பேன்.

## மட்டுநகர் மக்களுக்கு துரோகம் செய்ய முடியுமா?

ஆனால் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கு இடையூறுசெய்ய முற்பட்டபோது மட்டக்களப்பு மக்களுக்கு நான் துரோகம்செய்ய முடியுமா?

தமிழ்மொழி உரிமைக்கும், பிரதேசத்தைக் காப்பாற்றுவதற்கும், பேணிப்பாதுகாப்பதற்கும் நான் என்றும் விலகி நின்றவன் அல்ல; இன்றும் விலகியவன் அல்ல.

ஆனால் முதலில் நிலம் செழித்தோங்கவேண்டும். மக்களும் வாழவேண்டும்.

நிலம் அழிந்து மக்களும் வாழமுடியாத நிலை ஏற்பட்டால் எதைப் பாதுகாப்பது; எதைப் பேணிப்பாதுகாப்பது?

இதனால்தான் நிலத்தையும் மக்களையும் பாதுகாத்தல் முதற்பணியெனக் கருதி இத்தீர்மானத்தை மேற்கொண்டேன்.

## திருடச் சென்று...

[சாவகச்சேரி]

கொடிகாமம் கட்டைபறித்தான் பிள்ளையார் கோவிலுக்குள் திருடச் சென்றவர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் எவற்றையும் தொடாமல் வெறுங்கையுடனேயே வெளியேறிவிட்டனர்.

பொலிசார் நடத்திய விசாரணையின்போது இவ்விபரம் தெரியவந்தது.

கதவு ஒன்றை எரித்து அதன் மூலம், உட்சென்ற திருடர்கள் அங்குள்ள இரும்புப் பூட்டுகளையும் உடைத்துப் பார்த்திருப்பது தெரியவந்துள்ளது. மேல் கூரை ஓடுகளும் அகற்றப்பட்டுள்ளது. ஆனால் பொருட்கள் எதுவும் திருட்டுப்போகவில்லை. (ச)

## 8 பேருக்கு அபராதம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பட்டணசபைக்கு கடந்த 78 ம் ஆண்டுக்குரிய வரிப்பணத்தைச் செலுத்தாமலிருந்ததாக பண்டத்தரிப்புப் பட்டணசபைப் பிரதேசத்திலுள்ள எட்டு சிகை அலங்கார நிலையங்களின் உரிமையாளர்கள்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எஸ் ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஒவ்வொருவருக்கும் தலா 70 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. [அ]

# பத்திரிகையாளரின் விஜயம் பயனுள்ளதாக அமையட்டும்!

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயமொன்றைமேற்கொண்டு. இன்று யாழ்ப்பாணத்துக்கு நாங்கள் வருகை தந்துள்ளோம்.

வரலாறு என்பது ஒரு சாதாரண நிகழ்ச்சியல்ல.

இலங்கையின் 145 ஆண்டுக்கால பத்திரிகைத்துறை வரலாற்றில் நாட்டின் தென்பகுதியிலிருந்து இவ்வளவு பெரிய பத்திரிகையாளர் கோஷ்டி வடக்குக்கு விஜயம்செய்வது இதுவே முதற்தடவை என்றால் அது பெருமைக்குரிய விஷயமல்லவா?

உங்கள் பகுதிக்கு இப்பொழுது நாங்கள் வந்திருப்பது எந்த ஒரு முக்கிய பிரமுகரின் விஜயத்தைப்பற்றியும் செய்தி சேகரிக்க அல்ல. மக்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் நேரில் சந்தித்து கருத்துக்களை அறிந்துகொள்ளமட்டுமே நாங்கள் இங்கு வந்திருக்கின்றோம்.

நாங்கள் முழுக்க முழுக்க பத்திரிகையாளர்கள். எங்களிற் சிலர் பத்திரிகை உலகுக்குச் சற்றுப் புதியவர்களாக இருந்தாலும், அதிகமானவர்கள் நிறைந்த அனுபவசாலிகள். இதனைச் சற்று விரிவாகக் கூறுவதென்றால், பத்திரிகைத் துறையைக் கரைத்துக் குடித்தவர்கள்!

உங்களைச் சந்திக்கும் இந்த அரிய ஏற்பாட்டைச் செய்தமைக்கு வாய்ப்பளித்த யாழ். மாவட்ட கலாச்சாரச் சபையினருக்கும் இதன் தலைவர் யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோவுக்கும் நாம் மிகவும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

நாங்கள் எந்தவித மனக்கசப்புமின்றி, தெளிந்த உள்ளத்துடன், சிநேகபூர்வமாக உங்களைக் காண வந்திருக்கிறோம்,

நாங்கள் இங்கு தங்கியிருக்கும் ஐந்துநாட்களிலும் வடபகுதியின் பல்வேறு துறையினரையும், உழைக்கும் மக்களையும் காணும் சந்தர்ப்பம் எமக்குக்கிடைக்கும். இவற்றுடன் வடக்கின் முக்கிய பகுதிகளை தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பும் எமக்குக் கிடைத்திருக்கிறது

இந்தக் கலாச்சாரப் பரிவர்த்தனையின் மூலகர்த்தாவாகத் திகழும் யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ விசேஷ பாராட்டுக்குரியவர். யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய அரசாங்க அதிபர்களில் நல்லெண்ணமும் பரஸ்பரம் புரிந்துகொள்ளும் தன்மையும் கொண்டவர் இவர் என்றால் பொருந்தும். வடபகுதி மக்கள்மீது அவர் எத்தன்மையான அபிமானத்தைக் கொண்டிருந்தார், கொண்டிருக்கின்றார் என்பதை இரத்தினச்சுருக்கமாகச் சொல்வதென்றால், அவரது அன்னையின் மரணத்தின்போது அவர் நடந்துகொண்ட முறையைக் குறிப்பிடலாம்.

தனது அன்னையின் பூதவுடலை அவர் தகனம்செய்தது யாழ்ப்பாணத்தில்தான்!

அன்னையை நினைக்கும் தோறும் அவர் அகக்கண்முன் யாழ்ப்பாணம்தான் தோன்றும் இதேபோல யாழ்ப்பாணத்தை நினைக்கும்போது அவர் கண்முன் அவரது அன்னையின் உருவமே நிழலாகும்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்

## காமினி நவரத்ன

டோவை யாழ் மக்கள் மறக்க முடியாது. அவர் யாழ் மக்களின் நெஞ்சங்களில் பசுமையுடன் வாழுகின்றார் என்பதற்கு திரு. லயனல் பெர்னாண்டோவின் அன்னையாரின் இறுதிச்சடங்கின்போது சமுகமளித்திருந்த பெரும் மக்கள் கூட்டமே சாட்சிகூறும்? அது ஒரு சாதாரண நிகழ்ச்சி.

என்னைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் எனக்கு இரண்டாவது 'வீடு'! 1956-ம் ஆண்டு முதல் இதுவரை வடபகுதிக்கு இருபத்தைந்து தடவைகள் நான் விஜயம் செய்திருக்கின்றேன். எனக்குஇங்கு நிறைந்த நண்பர்கள் உண்டு. அவர்களின் விருந்தோம்பலுக்கும் குறைவில்லை. ஒவ்வொரு முறையும் நான் இங்கு வரும்போதும் மன உளைச்சலின்றி அகமும் முகமும் மலர என்னை வரவேற்க இந்த நண்பர்கள் தவறுவதில்லை.

வடபகுதியை நினைக்கும்போது எனது கண்முன் நிற்பவர் காலஞ்சென்ற எனது ஆத்ம நண்பன் எஸ் சத்தியதாசன்தான்! இவர்தான் என்னை முதன்முதலில் வடக்குக்கு அழைத்துவந்தவர், இங்குள்ள மக்களை அறிமுகப்படுத்தியவர் மக்களின் கலாச்சாரத்தைப்பற்றி புரியவைத்தவர். 'டைம்ஸ் ஒவ் சிலோன்' சத்தி (சத்தி என்றுதான் நாங்கள் அவரை அழைப்போம்) எனக்கு நண்பனுக்கும் மேலானவர், எனது உற்ற சகோதரன் போன்றவர். 1956ம் ஆண்டு என்னை அவர் முதற்தடவையாக யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவந்தபோது அவரது ஊரான புன்னாலைக் கட்டுவனுக்கு கூட்டிச்சென்று அகமும் முகமும் மலர எனக்கு அளித்த வரவேற்பு அந்த விருந்தோம்பல்......எனது இதயத்தையே விரிவுபடுத்திவிட்டது அந்த ஆரம்பக் 'கதை' ஒரு தொடர்கதையாக மாறி எனக்கும் யாழ்ப்பாண மக்களுக்குமிடையே ஒரு ஆழமான நட்பை உருவாக்கிவிட்டது.

யாழ்ப்பாணத்துக்கு இன்று என்னுடன் வந்திருக்கும் பத்திரிகையாளர்களின் முகங்களைப் பார்க்கும்போது எனது முதல்விஜயமே நினைவுக்குவருகிறது. என்னுடன் இங்கு வந்தவர்களில் பலருக்கு இது முதல் வடபகுதி விஜயமாக இருக்கலாம். ஆனால் பலருக்கும இது கடைசி விஜயமாக இருக்கமாட்டாது என்று நான் நம்புகின்றேன்.

சிறப்புமிகுந்த எங்களின் இவ்விஜயம் வடக்கு—தெற்கு உறவை மேலும் பலப்படுத்தி அதன் மூலம் இலங்கையில் நிலையான ஐக்கியத்தையும் சௌஜன்ய உறவையும் ஏற்படுத்தட்டும் என்று எதிர்பார்ப்போமாக.

திரு. காமினி நவரத்ன, இலங்கையின் பிரபல பத்திரிகையாளராகும்.

'மோணிங் டைம்ஸி'ல் நீண்டகாலமாகக் கடமையாற்றிய திரு காமினி நவரத்ன 'டைம்ஸ் ஒவ் சிலோன்', 'டெயிலி நியூஸ்', 'சன்' ஆகிய ஆங்கிலத் தினசரிகளில் பணியாற்றிய பின்னர் 1968ல் தமது சொந்த செய்தி ஸ்தாபனமான ''சந்தேச''வை ஆரம்பித்தார். இதன்மூலமாக வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களுடன் தொடர்புகொண்டு செய்திகள், கட்டுரைகளை கிரமமாக அனுப்பி வருகின்றார்.

'சன்', 'வீக் என்ட்' ஆங்கில பத்திரிகைகளில் இவர் தொடர்ச்சியாகஎழுதிவரும் கட்டுரைகள் மிகவும் பிரபல்யம்வாய்ந்தவை ஒவ்வொரு சனிக்கிழமையும் "சன்" பத்திரிகையில் ''சக்தியும் மக்களும்'' (பன் அன்ட் தபீப்பிள்) எனும் தலைப்பில் இவர் எழுதிவரும் கட்டுரைத் தொடர் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. 1971ல் ஈழத்தின் முதல் ''பத்திரிகை அகராதி''யை வெளியிட்ட திரு காமினி மற்றுமொரு புதிய பதிப்பை விரைவில் வெளியிட இருக்கின்றார்.

தமிழ்ப் பத்திரிகைகளில் ''ஈழநாடு''க்கும் இவருக்குமிடையே கடந்த பத்தாண்டுகாலமாக தொடர்பு இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

## புதிய அமைப்பில்

# நாளை மேடையேறுகிறது 'கந்தன் கருணை'



நாடக அரங்கக் கல்லூரியினர் ரசிகர் அவைக்காகத் தயாரித்தளிக்கும் "கந்தன் கருணை' நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறுகிறது.

யாழ்ப்பாணத்தில் நிலவும் சாதிக் கொடுமையைச் சாடுவதோடு அது முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்துவதே நாடகத்தில் ஒங்கி ஒலிக்கும் கருத்தாகும்.

சில ஆண்டுகளுக்கு முன் "கந்தன் கருணை' நாடகத்தை, "காத்தவராயன்' கூத்து மெட்டிலே நெல்லியடி அம்பலத்தாடிகள் நாட்டின் பல பாகத்திலும் மேடையேற்றிவந்தார்கள். ஆலயப் போராட்ட காலத்தில் முனைப்பும் கணிப்பும் மதிப்பும் பெற்றது 'கந்தன் கருணை. இந்த நாடகத்தின் மூலக்கதை என். கே. ரகுநாதனுடையதாகும்.

கொழும்பிலே காத்திரமான நாடகப் பணிபுரியும் நடிகர் ஒன்றியம் 'கந்தன் கருணை'க்குப் புதிய தோற்றம் கொடுத்தது. அம்பலத்தாடிகளில் ஒருவரான இளையபத்மநாதன் இறுக்கமாகத் தொகுத்தளிக்க, 'கந்தன் கருணை' புதியதொரு கலை வடிவம் கண்டது.

அம்பலத்தாடிகளின் பாடல்களோடு கவிஞர் இ. முருகையன், கவிஞர் இ. சிவானந்தன், சி. மௌனகுரு, சமுத்துலிங்கம், இளையபத்மநாதன் ஆகியோரின் புதிய பாடல்களும் சேர்ந்து நாடகத்தைச் சிறப்பிக்கின்றன.

நாடக அரங்கக் கல்லூரியின் இம்முயற்சியில் நாடக அரங்கக் கல்லூரிப் பயிற்சியாளர்களே பங்கெடுக்கிறார்கள். பிரபல மேடை நடிகர்கள் அ. பிரான்சிஸ்ஜெனம், ரி. எஸ். லோகநாதன், கே. நவரத்தினம், எஸ். சுந்தரலிங்கம், செல்வபத்மநாதன், ஆர். ராஜேஸ்வரன் உட்பட மொத்தம் பதினேழு நடிகர்கள் பங்குபற்றுகிறார்கள். பங்கு கொள்ளும் நடிகர்கள் யாவரும் ஒரே நேரத்தில் மேடையில் தோன்றுவது விசேஷ அம்சமாகும். திரைப்பட இசை அமைப்பாளர் எம். கண்ணன் இசை நிர்வாகத்தைக் கவனிக்கிறார். பிரபல நாடக இயக்குனரான திரு அ தாசிசியஸ் நெறியாட்சி செய்ய, கல்லூரி சார்பில் திரு ம. சண்முகலிங்கம் தயாரித்தளிக்கிறார்.

--ரசிகன்

வெளிநாடுகளுக்கான
வேலைவாய்ப்பும் சான்றிதழும்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
தொழினுட்பப் பிரிவு

(1) மரவேலை (2) மேசன்வேலை

மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் 8ஆம் வகுப்புப் படித்த பாடசாலை விட்டுவிலகிய மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

பயிற்சிக்காலம்: 6 மாதங்கள்.

கட்டணம்: ரூபா 10/- (மாதமொன்றுக்கு)

விண்ணப்ப முடிவுத் திகதி. 31-3-79

அதிபர்.

1974

## வித்திக்கு இன்று பாராட்டு

(கொக்குவில்)

பேராசிரியர் சு. வித்தியானந்தன் முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கும், இலக்கிய ஆராய்ச்சித்துறைக்கும் ஆற்றிய பணியினைக் கௌரவிக்குமுகமாக இன்று மாலை 6-30 மணிக்கு யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் அவருக்கு பாராட்டுவிழாவும், தேநீர் விருந்தும் அளித்துக் கௌரவிக்கபடவிருக்கிறது. இவ் வைபவத்தில் யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், அகில இலங்கை காதீப்மார்கள் சங்கத் தலைவர் கலாநிதி கே. எம். எச். காலித்தீன், அல்ஹாஜ் கலாநிதி எம். எம். உவைஸ், ஜனாப்கள் எம். எம். மன்சூர், ஆர் எம். இமாம், எஸ். எம். கமால்தீன் ஆகியோரும் உரை நிகழ்த்துவர்.

ஜனாப் எம் எஸ். ஏ. ரஹீம் வாழ்த்துப்பத்திரம் வழங்குவார்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவில் மகோற்சவம் 2-ம் நாளாகிய இன்று காலை 9 மணிக்கு பூஜையாகி உள் வீதிவலமும் மாலை 6-30க்கு பூஜையாகி முடிவானதும் வெளிவீதிவலமும் வந்து அடியார்களுக்கு விநாயகப் பெருமான் காட்சி கொடுப்பார்.

## ஜனநாயகவிரோத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரம் இல்லாத சுடுகலன்களை வைத்திருப்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. அதே வேளையில் இத்தகைய குற்றத்துக்கு 50 ரூபா அபராதம் விதிக்கப்படுகிறது என்றும் திரு. ஜெயவர்த்தனா கூறினார்.

ஹொரணை ஸ்ரீ பாலிகா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு பேசினார்.

## சந்தேக்நபர்களை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர்கள் ஏழுபேரும் நீதிமன்றத்தின் கிழக்குப்புற வாசலுக்கு மூடிய பொலிஸ் டிரக் ஒன்றில் அழைத்து வரப்பட்டு அங்கிருந்து துணியால் கால்முதல் தலைவரை மறைத்தபடி ஒவ்வொருவராக நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர்

நீதிமன்றத்திற்கு வெளியிலும் அருகிலுள்ள வீதிகளிலும் சந்திகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல் புரிந்தனர்,

சுமார் இரண்டரை மணித்தியாலங்கள்வரை மூன்று கொள்ளைகள் தொடர்பான அடையாள அணிவகுப்பு இடம் பெற்றது,

### ரயில் நிலையக் கொள்ளை

யாழ். ரயில்நிலையக் கொள்ளைதொடர்பாக கொள்ளையின்போது பணத்தைப் பறிகொடுத்த ரயில் நிலைய அதிபர் திரு ஆர்னோல்ட் மற்றும் மூன்று சிற்றூழியர்களும் அடையாளம் காண்பதற்கு அழைக்கப்பட்டு சந்தேக நபர்கள் எவரையுமே அவர்கள் அடையாளம் காட்டவில்லை.

### இராசவீதி பஸ்கொள்ளை

கோப்பாய்-. இராசவீதி பஸ்ஸில் இடம்பெற்ற கொள்ளை தொடர்பாக அழைக்கப்பட்ட கொள்ளையடிக்கப்பட்ட பஸ்ஸின் சாரதி, காப்பாளர், பிரயாணி ஒருவர் ஆகியோரும் எவரையும் அடையாளம் காட்டவில்லை.

### சிறுப்பிட்டிக்கார் கொள்ளை

சிறுப்பிட்டி ஈ. எல், 5008 மோட்டார் கொள்ளை தொடர்பாக அழைக்கப்பட்ட காரின் சாரதி நாகராஜாவும் எவரையும் அடையாளம் காட்டவில்லை.

இம் மூன்று கொள்ளைகள் தொடர்பாகவும் சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

கொடிகாமம் ப. நோ. கூ. சங்க கொள்ளை தொடர்பாக ஏழுபேரும் விளக்க மறியலில் இருப்பதால் மீண்டும் அவர்கள் விளக்கமறியலுக்கு அனுப்பட்டனர். [இ]

## யாழ் வந்த...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

[சர்வோதய] திரு. கின் பேட்டஸ் [லங்காதீப] க. குணசேன லியனகே [எழுத்தாளர்]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389.